සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவமாகாணகல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

පළමු වාර පරීක්ෂණය 2018 — 11 ශ්‍රේණිය
முதலாம் தவணைப் பரீட்சை — தரம் 11
First Term Test 2018 — Grade 11

සිව ආගම I II
சைவநெறி I II
sivanery I II

மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண்: - ..................................

## பகுதி - I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. “சிவம் எனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்” எனப்பாடியவர் யார்?
   (I). மெய்ப்பொருள் (II). விஷ்னு (III). பிரம்மா (IV). சபரிமலைநாதர்

2. அருள் மொழித் தேவர் எனும் இயற்பெயரை கொண்டவர்,
   (I).கச்சியப்பர் (II). கம்பர் (III).சேக்கிழார் (IV).அருணகிரிநாதர்

3. உயிர் உடலில் இருக்கும்போது ஆற்றப்படும் கிரியை,
   (I).அபரக்கிரியை (II). பூர்வக்கிரியை
   (III).நித்தியகிரியை (IV).காமியகிரியை

4. உத்தராண காலப்பகுதி
   (I).தை - மாசி (II). ஆடி - மார்கழி (III).தை-ஆனி (IV).தை-பங்குனி

5. “எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே” – எனப்பாடியவர்,
   (I).தாயுமானவர் (II). சேக்கிழார் (III).சுந்தரர் (IV).மணிவாசகர்

6. முதல் பஞ்சாங்கம் எக்காலத்தில் தோற்றம் பொற்றது?
   (I).சோழர்காலம் (II). குப்தர் காலம் (III).சங்ககாலம் (IV).நாயக்கர்காலம்

7. சந்திர மாதங்கள் எந்த மாதத்தில் தொடங்கும்?
   (I).தைமாதம் (II). வைகாசி மாதம்
   (III).மார்கழி மாதம் (IV).சித்திரை மாதம்

8. இருக்கு வேதப் பாடல்களின் எண்ணிக்கை,
(I).1028 (II). 1018 (III).1008 (IV).1128

9. "குனித்த புருவமும் கொவ்வை செவ்வாயிற்…" என்ற திருமுறையின் பண்,
(I).நட்டபாடை (II). திருவிருத்தம் (III).பழம்பஞ்சுரம் (IV).செந்துருத்தி

10. திருத்தொண்டர் தொகை பாடியர்,
(I).சேக்கிழார் (II). சம்பந்தர் (III).சுந்தரர் (IV).தாயுமானவர்

11. மகோற்சவ நிகழ்வுகளில் "வாகனத் திருவிழா" எத்தொழிலைக் குறித்து நிற்கின்றது?
(I).படைத்தல் (II). அழித்தல் (III).மறைத்தல் (IV).காத்தல்

12. சகலாம பண்டிதர் என அழைக்கப்படுபவர்,
(I).மெய்கண்ட தேவர் (II). பரஞ்சோதி முனிவர்
(III).சனத்குமார முனிவர் (IV).அருணந்தி சிவாச்சாரியார்

13. விபுலானந்தரின் பிரம்மச்சரிய நாமம்,
(I).மயில்வாகனம் (II). பிரபோத சைத்தன்யர் (III).ஆறுமுகம் (IV).சதாசிவம்

14. வேதாந்தம், வேதசிரசு என சிறப்பிக்கப்படுவது,
(I).ஆகமம் (II). குமரகுருபரர் (III).பாரதியார் (IV).கபிலர்

15. மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை பாடியவர்,
(I).கச்சியப்பர் (II). குமரகுருபரர் (III).பாரதியார் (IV).கபிலர்

16. எல்லா ஆலயங்களிலிலும் காணப்படும் வைரவ மூர்த்தம்,
(I).வடுகலை வரைவர் (II). கால வைரவர்
(III).ஞான வைரவர் (IV).சுவர்ண வைரவர்

17. தென்புகலி வேந்தன் எனச் சிறப்பிக்கப்படுபவா,
(I).சம்பந்தர் (II). சுந்தரர் (III).மணிவாசகர் (IV).அப்பர்

18. ஆருத்திரா தரிசனம் சிறப்பாக நடைபெறும் ஆலயம்,
(I).திருவரங்கம் (II). சிதம்பரம் (III).மதுரை (IV).பழனி

19. திருவெம்பாவையின் இறுதிநாள் எவ்வாறு அழைக்கப்படும்?
(I).மகாநவமி (II). உத்தராடம் (III).திருவாதிரை (IV).பௌர்ணமி

20. சுக்கில பட்சத்தில் அடங்காதது
(I).துதியை (II). பஞ்சமி (III).நவமி (IV).அமவாசை

21. நட்சத்திரங்கள் எத்தனை?
(I).30 (II). 27 (III).25 (IV).22

22. "ஒப்புரவு ஒழகு" என ஔவையாரால் எந்த நூலில் சிறப்பிக்கிறார்?
(I).கொன்றை வேந்தன் (II). நல்வழி (III).ஆத்திசூடி (IV).மூதுரை

23. சந்தக்கவி எனப் போற்றப்படும் நூல்,
(I).அபிராமி அந்தாதி (II). திருவாசகம் (III).திருப்புகழ் (IV).திருவாய்மொழி

24. சைவ வித்தியா விருத்தி சங்கம் ஆரம்பிக்கப்பட்டது?
(I).1924 (II). 1923 (III).1920 (IV).1925

25. நரக சதுர்த்தி என அழைக்கப்படும் பண்டிகை,
(I).தைப்பொங்கள் (II). தீபாவளி (III).ஆடிப்பிறப்பு (IV).புத்தாண்டு

26. சூரியன் நிற்கும் இடத்திலிருந்து சந்திரம் நிற்கும் தூரத்தைக் குறித்து நிற்பது,
(I).நட்சத்திரம் (II). திகதி, வாரம் (III).யோகம் (IV).திதி

27. திலகவதியார் சரியைத் தொண்டு செய்த தலம்,
(I).திருவீரட்டானேஸ்வரம் (II). சிதம்பரம் (III).காசி (IV).பழனி

28. வேதகால வழிபாடு,
(I).நாட்டார் தெய்வ வழிபாடு (II). இயற்கை வழிபாடு
(III).உருவ வழிபாடு (IV).தியானம்

29. பிதிர்கள் பூமியில் தங்கும் நாட்களை எவ்வாறு அழைப்பர்?
(I).மகாலய சிரார்த்தம் (II). பிரதமை (III).மகம் (IV).மகாலய பட்சம்

30. ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படுபவர்,
(I).விபுலானந்தர் (II). சுந்தரர் (III).நாவலர் (IV).உமாபதி சிவாச்சாரியார்

31. சைவநெறியில் மிகமேலானதாக மதிக்கப்படுவது,
(I).அன்பு (II). துறவு (III).அறிவு (IV).புகழ்

32. கடல்நீரில் விளக்கேற்றும் அற்புதம் மிக்க ஆலயம் அமைந்த இடம்,
(I).வற்றாப்பளை (II). மட்டுவில் (III).கண்டி (IV).காரைதீவு

33. சுந்தரமூர்த்தி நாயனாரின் முத்தியடைந்த தினம்,
(I).சித்திரை சதயம் (II). வைகாசி மூலம்
(III).ஆடிச்சுவாதி (IV).ஆனிமாதம்

34. நாலாயிரந் திவ்விய பிரபந்தங்களை தொடுத்தவர்,
(I).நம்பிடியாண்டார் நம்பி (II). நாதமுனிவர்
(III).ராமானுஜர் (IV).குலசேகர ஆழ்வார்

35. தன்மாத்திரைகள் எனப்படுபவை?
(I).மெய், வாய், கண், மூக்கு, செவி (II). ஊறு. சுவை, ஒளி, நாற்றம், ஓசை
(III).நீர், நிலம், காற்று, தீ, ஆகாயம் (IV).மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

36. முருகனின் கையிலுள்ள வேல் இறைவனின்,
(I).சிவச்சக்தி (II). ஞானசக்தி (III).கிரியாசக்தி (IV).அற்புத சக்தி

| | | | |
|---|---|---|---|
| A. தடத்தநிலை | B.சிவஞான சித்தியார் | C.சக்தி | D.சக்தி |
| E.சிவம் | F.மெய்கண்டதேவர் | G.அருணந்தி சிவாச்சாரியார் | H.சொரூபநிலை |
| I.பிரமா | J.உருத்திரன் | K.நாதம் | L.சிவஞானசித்தியார் |

37. கடவுளின் இருநிலைகளுடன் தொடர்புடைய தொகுதி,
(I).A,B (II). A,G (III).A,H (IV).I,J

38. அருவுருவத் திருமேனியை உள்ளடக்கியது,
(I).E,C,K,D (II). E,D,J,I (III).I,C,J,K (IV).k,E,D,I

39. சைவ சித்தாந்தத்தின் முதல் வழிநூல் அவற்றை ஆக்கியவர்களின் பெயர்,
(I).A,B,I,J (II). AF,L,D,C (III).C,B,F,G (IV).H,L,G,F

40. சைவ சமயிகளின் இறுதி இலட்சியம்,
(I).முத்தியின்பம் பெறல் (II). உண்டு, உடுத்து வாழல்
(III).செல்வம் திரட்டல் (IV).உலக இன்பத்தை அனுபவித்தல்

( 40 x 1= 40 புள்ளிகள்)

# பகுதி - II

- முதலாம், இரண்டாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1) .சுருக்க விடை தருக.

   a. ஒப்புரவு என்றால் என்ன?
   b. கந்தசஷ்டி விரதம் எப்போது அனுட்டிக்கப்படும்?
   c. பண்டிகை என்றால் என்ன?
   d. சபின்டீகரணம் என்றால் என்ன?
   e. அகச்சந்தான குரவர்கள் யாவர்?
   f. குருவழிபாட்டின் மூலம் முத்தியடையாதவர்கள் யாவர்?
   g. இலங்கையில் பிரசித்தி பெற்ற திரௌபதியம்மன் ஆலயங்கள் 2 தருக.
   h. சுவாமி விபுலானந்தரால் எழுதப்பட்ட திசை காணும், நாட்களாலும் யாவை?
   i. மூவகை ஆண்மாக்களும் யாவை?
   j. நாட்டார் கலைகள் 4 தருக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

2) பின்வரும் தேவாரப் பாடல்களில் நீர் விரும்பிய இரண்டு பாடல்களை அடிமுறை பிழையாது எழுதி, பொழிப்புரையையும் தருக.

   a. "குனித்த புருவமும் கொவைவைச் செவ்வாயிற்….."
   b. "மிளா அடிமை உமக்கே ஆளாய்…………"
   c. "கற்றவர் விழங்கும் கற்பகக் கனியை………."
   d. "பச்சைமாமலை போல் மேனி………."
   e. "ஆத்தாளை எங்கள் அபிராமி வல்லியை……….."

(6 x 2 =12 புள்ளிகள்)

3) . "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

   a. கழுதாவளைப் பிள்ளையார் ஆலயம் எம்மாவட்டத்தில் அமைந்துள்ளது?
   b. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தின் இறைவன், இறைவி பெயர் யாது?
   c. நயினை நாகபூசனி அம்மன் ஆலயத்தின் தீர்த்தம் யாது?
   d. நல்லூர் கந்தசுவாமி ஆலய வரலாற்றோடு தொடர்புடைய மன்னர்கள் யாவர்?

(4 x 3 =12 புள்ளிகள்)

4) . "சமய குரவர்கள் போற்றி வாழ்வோம்"

   a. திருஞான சம்பந்தர் பெற்றோர் பெயர் யாது?
   b. திருநாவுக்கரசரின் பிறந்த ஊா யாது?
   c. சுந்தரர் செய்த அற்புதங்கள் 4 தருக.
   d. மணிவாசகர் பாடிய நூல்கள் இரண்டின் பெயரைத் தருக.

(4 x 3 =12 புள்ளிகள்)

5) . ‘‘விரதங்களை அனுட்டிக்க வேண்டும்’’

a. விரதம் என்றால் என்ன?
b. விநாயகசஷ்டி விரதம் எப்போது அனுட்டிக்கப்படும்?
c. கந்த சஷ்டி விரத நியதிகள் இரண்டு தருக.
d. விரதங்களை அனுட்டிப்பதால் கிடைக்கும் நண்மைகள் 4 தருக.

(4 x 3 =12 புள்ளிகள்)

6) . ‘‘பதி, பசு, பாசம் முப்பொருட்களாகும்’’

a. அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் யாது?
b. சதசத்து என்பதன் பொருள் யாது?
c. மூவகை ஆன்மாக்களும் எவை?
d. ஆன்மாக்களின் இயல்புகள் யாவை?

(4 x 3 =12 புள்ளிகள்)

7) .பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

a. சைவ விழுமியங்கள்
b. சந்தான குரவர்கள்
c. நாட்டார் கலைகள்
d. சரியைத் தொண்டுகள்
e. ஆலயமும் சமுதாயமும்

(2 x 6 =12 புள்ளிகள்)